11 ஆம் வகுப்பு - தமிழ் ( புதிய பாடத்திட்டம்)
இயல் 1 & 2 உரைநடை, செய்யுள் மதிப்பீடு

சரியான விடையைத் தேர்க.

1) சிலி நாட்டில் பிறந்து, இலத்தீன் அமெரிக்காவில் கவிஞராக இருந்தவர்
அ) மல்லார்மே ஆ) பாப்லோ நெருடா இ) வால்ட்விட்மன்

2) தமிழின் கவிதையியல் எனும் நூலின் ஆசிரியர்
அ) இந்திரன் ஆ) வில்வரத்தினம் இ) சிவத்தம்பி

3) வால்ட் விட்மன் கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்தவர்
அ) சங்கர்ஜெயராமன் ஆ) ஸ்ரீராம் இ) வேங்கடாசலபதி

4) உழவு உலகிற்கு அச்சாணி - என்றவர்
அ) பாரதியார் ஆ) வள்ளுவர் இ) நம்மாழ்வார்

5) வைக்கோல் பற்றி மிகச் சிறந்த ஆய்வைச் செய்தவர்
அ) நம்மாழ்வார் ஆ) மசானபு ஃபுகோகா இ) சொக்கலிங்கம்

6) ஐந்து விவசாய மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர்
அ) மசானபுஃபுகோகா ஆ) நம்மாழ்வார் இ) வள்ளுவர்

www.Padasalai.Net

7) ஒரிய மொழிக் கவிஞர்
அ) மல்லார்மே ஆ) மனோரமா பிஸ்வாஸ் இ) நெரூடா

8) நுண்கலை, வெளிச்சம் ஆகிய இதழ்களை நடத்தியவர்
அ) இந்திரன் ஆ) வில்வரத்தினம் இ) சிவத்தம்பி

9) உயிர்தெழும் காலத்துக்காக எனும் நூல் எவ்வகைச் சார்ந்தது
அ) சிறுகதை ஆ) புதுக்கவிதை இ) மரபுக் கவிதை

10) தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை
அ) சிறகில்லா பறவை ஆ) கூடில்லா மரம் இ) கூடில்லா பறவை

11) தமிழின் முதல் இலக்கண நூல்
அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல் இ) தண்டி

12) நன்னூலில் உள்ள அதிகாரங்கள்
அ) 2 ஆ) 3 இ) 5

13) நூலுக்குமுன் சொல்லப்படுவது
அ) அணிந்துரை ஆ) முகவுரை இ) பதிகம்

14) நன்னூல் முதல் பதிப்பு வெளியான ஆண்டு
அ) 1832 ஆ) 1833 இ) 1834

15) தென் ஆரிநாடு என்று அழைக்கப்படுவது
அ) திருமலை ஆ) குற்றாலம் இ) பண்பொழில்

16) பெரியவன் கவிராயரின் காலம்
அ) 16 ஆம் நூற்றாண்டு ஆ) 17 ஆம் நூற்றாண்டு இ) 18 ஆம் நூற்றாண்டு

17) திருமலை முருகன் பள்ளு கூறும் நெல் வகைகளுள் ஒன்று
அ) பூம்பாளை ஆ) கண்காணம் இ) உழக்கோல்

18) பேயனார் பாடிய சங்கப் பாடல்கள்
அ) 500 ஆ) 100 இ) 105

19) ஐங்குறுநூற்றின் பேரெல்லை
அ) மூன்றடி ஆ) ஆறடி இ) நான்கடி

20) வடகரை வாய்க்காலில் மீனைப் பிடிக்க அமர்ந்திருக்கும் பறவை
அ) காரி பறவை ஆ) உள்ளான் பறவை இ) கருமறையான்

கோடிட்ட இடங்களை நிரப்புக.
...................................................

www.Padasalai.Net

1) பாயிரம் ............... வகைப்படும்.

2) பாப்லோ நெரூடா ............. ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றார்.

3) தமது, மொழிபெயர்ப்பு நூலுக்காக 2011 இல் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்...............

4) மல்லார்மே கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்தவர்.............

5) வில்வரத்தினம் .............. எனும் தீவில் பிறந்தவர்.

6) ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும் ............ இல்லது பனுவல் அன்றே.

7) பவணந்தியாரின் உருவச்சிற்பம் ஈரோடு மாவட்டம்............ ஊரில் உள்ளது.

8) நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றைத் தந்து சொல்வது...........

9) ஏழைகளோட கற்பக விருட்சம்னு சொல்லப்படும் மரம்............

10) அழகிய பெரியவனின் இயற்பெயர் .............

11) அரூப நஞ்சு எனும் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்..........

12) உயிர்களின் இருப்பை ............ முடிவு செய்கிறது.

13) பெருகும் வேட்கை எனும் கட்டுரைத் தொகுப்பை எழுதியவர்........

14) ஐங்குறுநூறு எனும் நூலைத் தொகுத்தவர்.........

15) கவினி எனும் சொல்லின் பொருள் .........

பொருத்துக.
.....................

| | | | |
|---|---|---|---|
| 1) | குறிஞ்சி | - | அம்மூவனார் |
| 2) | முல்லை | - | கபிலர் |
| 3) | மருதம் | - | பேயனார் |
| 4) | நெய்தல். | - | ஓதலாந்தையார் |
| 5) | பாலை | - | ஓரம்போகியார். |

குறுவினாக்கள் :
.............................

www.Padasalai.Net

1) மொழி குறித்து எர்னஸ்ட் காசிரர் கூறுவது யாது ?
2) பாப்லோ நெரூடா- குறித்து எழுதுக.
3) பாயிரத்திற்குரிய ஏழு பெயர்கள் யாவை ?
4) பொதுப் பாயிரத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள் யாவை ?
5) மதிப்புக் கூட்டுப்பொருள் என்பது யாது ?
6) ஐந்து விவசாய மந்திரங்கள் யாவை ?
7) தொழு உரம் என்றால் என்ன ?
8) பனை மரத்தினால் கிடைக்கும் பயன்கள் யாவை ?
9) ஒற்றை வைக்கோல் புரட்சி - குறிப்பு வரைக.
10) திருமலை முருகன் பள்ளு கூறும் மாடுவகைகளுள் நான்கனை எழுதுக.

சிறுவினாக்கள் :
...........................

1) வாளினும் வலிமையானது மொழி என்பதை விவரிக்க.
2) சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் யாது ?
3) இயற்கை உரங்கள் யாவை? அவற்றைப் பயன்படுத்துவதன் நன்மைகளைக் கூறுக.
4) தென்கரை நாட்டின் வளத்தினை விவரிக்க.
5) திருமுருகன் பள்ளு கூறும் நெல் வகைகளைப் பட்டியலிடுக.

www.Padasalai.Net www.TrbTnps.com

6) கண்காணி - இச்சொல் குறித்து விளக்குக.
7) கா.சிவத்தம்பி கவிதை குறித்து தரும் விளக்கம் யாது?

நெடுவினாக்கள் :
.............................

1) யுகத்தின் பாடல் கவிதையில் தமிழ் எவ்வாறெல்லாம் சிறப்பிக்கப்படுகிறது ?

2) பேச்சுமொழிகளைக் கவிதையில் பயன்படுத்துபவர்களின் மூன்று வகையினர் குறித்து விவரிக்க.

3) பாயிரத்திற்குரிய ஏழு பெயர்களை விவரிக்க.

4) இயற்கையைப் பயன்படுத்தி வேளாண்மை செய்வதன் நன்மைகளை விவரிக்க.

5) வடகரை, தென்கரை நாட்டின் வளங்களை எழுதுக.

தயாரிப்பு :
எஸ்.ஜெயசெல்வன்.
தி.ஆ.மே.நி.பள்ளி,
திருவிடைமருதூர்.
செல் :9443740120

www.Padasalai.Net

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html